Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556
DHINATH DHALAM Tamil & English daily Paper

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 021 | செவ்வாய்க்கிழமை Tuesday | 21.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ஒவ்வொரு வாக்கும் மிக முக்கியம் என்பதை உணர்ந்து பணியாற்ற வேண்டும்


## வாக்குச்சாவடி முகவர்களுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் அறிவுறுத்தல்



தேர்தல் பரப்புரை அனல்பறக்கஇருக்கின்ற இந்த நிலையில் திமுக பாக முகவர்களுடன் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நண்பகல் 12 மணிக்கு காணொளி வாயிலாக தனது இல்லத்திலிருந்து தொலைபேசி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார். சட்டமன்றத் தேர்தல் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்ற நிலையில் பாக முகவர்களுடன் முதலமைச்சர் கலந்துரையாடினார்.

முதல்முறையாகநவீன தொழில்நுட்பத்தில் 7,500 வாக்குச்சாவடி முகவர்களுடன் ஒரே நேரத்தில் உரையாடியுள்ளார். இதில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார். நாடாளுமன்றத்தில் பாஜக கொண்டு வந்த மசோதா காரணமாக நம் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாக்க முயன்ற சதியை நாம் போராடி வென்றோம் என்றும் ஆனால் அவர்கள் இத்துடன் நிறுத்த மாட்டார்கள் எனவும் இன்னும் பல போராட்டங்கள் இருக்கின்றன. நாம் உணர்த்துவதுடன், நாம் வலிமையுடன் போராட வேண்டும் என்றும் கூறியுள்ளார். ஒவ்வொரு வாக்குச்சாவடி முகவரும் இந்த இரண்டு நாட்கள் அவரவர் வாக்குச்சாவடிக்கு உட்பட்ட வீடுகளுக்கு மீண்டும் ஒருமுறைநேரில்சென்று ஆதரவு திரட்ட வேண்டும் என்றும், திமுகவுக்கான வாக்குகள் ஒன்று கூட விடுபடக் கூடாது என்றும் கூறியுள்ளார். முதியவர்கள், வயதானவர்களை அழைத்துச் சென்று தொடர்ந்து வாக்குச்சாவடி வாக்களிப்பதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும். எந்தவித விதி மீறலோ, முறைகேடோ நடந்தால் உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.வாக்குப்பதிவு நாளில் வாக்குப்பதிவு தொடங்கி கடைசி வாக்கு பதிவாகும் வரை வாக்குச்சாவடியிலேயே வாக்குச்சாவடி முகவர்கள் இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். திராவிட மாடல் ஆட்சியின் சாதனைத் திட்டங்களால் மக்கள் மத்தியில் நமக்கான ஆதரவு அலையே வீசுகிறது என்றும், ஒவ்வொரு வாக்கும் மிக முக்கியம் என்பதை உணர்ந்து பணியாற்ற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். தேர்தல் முடிவுகள் வரும் பொழுது ஒவ்வொரு தொகுதியாக, வாக்குச்சாவடி வாரியாக நாம் பெற்ற வாக்குகளை அலசி ஆராய்வேன் என்றும் திமுக வாக்குச்சாவடி முகவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். அதேபோன்று ஒவ்வொரு தொகுதியிலும்அதிகவாக்குகளைப் பெற்று தந்த வாக்குச்சாவடி முகவரை நானே நேரில் சந்திப்பேன் என்றும்முதலமைச்சர்கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டை டெல்லியில் இருந்து ஆள அதிமுக மூலம் ஆர்எஸ்எஸ் திட்டம்: கன்னியாகுமரியில் ராகுல் காந்தி பிரச்சாரம்



கன்னியாகுமரி:

தமிழ்நாட்டை டெல்லியில் இருந்து ஆள பாஜகவால் ஒரு போதும் முடியாது என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் இறுதிகட்ட தேர்தல் பரப்புரை தீவிரமடைந்துள்ளது. நாளையுடன் பரப்புரை நிறைவு பெறவுள்ளதால் தேசியகட்சிதலைவர்கள், தமிழக தலைவர்கள் உள்ளிட்டோர் தீவிர பிரச்சாரம் செய்து வருகின்றனர்.அந்தவகையில் நேற்று முன்தினம் பிரதமர் மோடி தமிழகத்தில் பிரச்சாரத்தில் செய்த நிலையில், ராகுல் காந்தி கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்.

விருதுநகர் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல்

கன்னியாகுமரிமாவட்டம் குளச்சல் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், "சிவகாசி பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்த 23 தொழிலாளர்களுக்கு முதலில்அஞ்சலிசெலுத்த கடமைப்பட்டுள்ளேன். சில ஆண்டுகளுக்கு முன்பு எனது பாரத் ஜோடோ யாத்திரையை கன்னியாகுமரியில் தொடங்கி காஷ்மீரில் நிறைவு செய்தேன். என் யாத்திரையின் முக்கிய நோக்கம்நாடுமுழுவதும் மக்களிடம் ஒற்றுமையை விதைப்பது தான். அந்த நோக்கத்தை நோக்கி தான்காங்கிரஸ்கட்சிபயணித்து வருகிறது.

பிரிவினை அரசியலை எதிர்க்கிறோம்

பாஜக, ஆர்எஸ்எஸ் அமைப்புமக்களிடம்பிரிவினையை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் செயல்பட்டு வருகின்றன. எங்களை பொறுத்தவரை இந்தியா என்பது பல்வேறு மாநிலங்களின் ஒன்றியம். பல்வேறு மக்களின் மொழி, கலாச்சாரங்களை போற்றிப் பாதுகாக்கும் விதமாக அரசியல் அமைப்பு இருக்க வேண்டும் என விரும்புகிறோம்.

ஒருமாநிலம்எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அது எங்களுக்கு முக்கியமானது தான்.

பாஜக ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே வரலாறு, ஒரே பண்பாடு என அனைத்தையும் ஒற்றை அரசியலுக்குள் அடக்க நினைக்கிறது. இது தான் எங்களுக்கும், அவர்களுக்குமான வித்தியாசம். தமிழ்நாடு தமிழர்களால் ஆளப்பட வேண்டும். ஒவ்வொரு மாநிலங்களும்அந்தமாநிலநிர்வாகத்தை நடத்த வேண்டும். நம்முடைய அரசியல் அமைப்பும் அதை தான் வலியுறுத்துகிறது.

ஆனால், அரசியல் சாசன சட்டத்தை பாஜக ஏற்றுக்கொள்ளவில்லை. மாநில கூட்டாட்சி தத்துவத்தை பாஜக சிதைக்கிறது.மணிப்பூரில் பாஜக அதை செய்து தான் அந்த மாநில அமைதியை குலைத்தது. பாஜக பற்ற வைத்த தீ இன்றும் மணிப்பூரில் கொளுந்துவிட்டு எரிகிறது. மணிப்பூர் சின்னாபின்னமாக்கப்பட்டதற்கு பாஜக தான் முதல் காரணம், முக்கிய காரணம்.

அதிமுக மூலம் தமிழகத்தை ஆள ஆர்எஸ்எஸ் திட்டம்

பாஜகவுக்கு எங்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் அதிகாரத்தை கைப்பற்றி டெல்லியில் இருந்து கொண்டு ஆளப் பார்க்கிறார்கள்.அதற்காகதமிழகத்தில்பெரியவரலாற்றை கொண்ட இயக்கத்தை கைப்பற்றி உள்ளனர். அதிமுக தமிழக வளர்ச்சியில் பெரிய பங்காற்றியுள்ளது என்பதை மறுப்பதற்கு இல்லை. அதிமுக ஒரு காலத்தில் தமிழகத்தை டெல்லியில் பிரதிநிதித்துவப்படுத்தி வந்துள்ளது. ஆனால், இன்று அந்த கட்சி வெற்றுக்கூடாரமாக உள்ளது.

பாஜக தமிழகத்தில் நுழையும் கருவியாக அதிமுக மாறிவிட்டது. அதிமுகவின் தற்போதைய தலைவர்கள் ஊழலில் சிக்கியுள்ளதால் மோடி அரசிடம் முழுமையாக சரணடைந்து விட்டனர். பினாமிகளை வைத்துதமிழகத்தைஆள ஆர்எஸ்எஸ் விரும்புகிறது. தமிழர்கள் ஒருகாலத்திலும்அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், சரணடைய மாட்டார்கள் என்று ஆர்எஸ்எஸ்க்கு தெரியும் என்பதால், அதிமுக மூலம்கால்பதிக்கமுயல்கிறார்கள். இந்தியாவில் பாஜகவால் ஒருபோதும் வெறுப்பு அரசியலை பரப்ப முடியாது.

# தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் நிறைவுற்றதும் அமலுக்கு வரும் விதிமுறைகள் என்னென்ன?




சென்னை:தமிழகத்தில் (ஏப்.21) மாலை 6 மணியோடு பிரச்சாரம் முடிவடைந்த உடன், அமலுக்கு வரும் தேர்தல் விதிமுறைகள் அடங்கிய பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் வரும் ஏப்ரல் 23-ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில் 4 முனைப் போட்டி நிலவுவதாக கூறப்படுகிறது. தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகள் கடைசி நேர சூறாவளிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில், ஏப்.21 மாலை 6 மணியோடு பிரச்சாரம் முடிவடைந்த உடன், அமலுக்கு வரும் தேர்தல் விதிமுறைகள் அடங்கிய பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார். அதன் விவரம்: 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப்.23 ஆம் தேதி காலை7.00மணிமுதல் மாலை6.00மணி வரை நடைபெறும். ஏப். 21 ஆம் தேதி மாலை 6.00 மணி முதல் வாக்குப்பதிவு முடிவடையும் வரையில் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126-ன் கீழ்,பின்வரும் விதிமுறைகள் செயலில் இருக்கும்.

தேர்தல் தொடர்பான யாதொரு பொதுக் கூட்டத்தையோ ஊர்வலத்தையோ யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ கூடாது.

யாதொரு தேர்தல் விவகாரத்தையும், திரைப்படம், தொலைக்காட்சி, எஃப்.எம்.ரேடியோ,வாட்ஸ்-அப்,முகநூல்,ட்விட்டர் போன்ற அல்லது இது போன்ற சாதனம் வாயிலாகப் பொது மக்களின் பார்வைக்கு வைக்கக் கூடாது. குறுஞ்செய்தி மற்றும் இணையம் உட்பட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்பையும் இது உள்ளடக்கும்.

பொதுமக்களில்எந்தவொரு நபரையும் ஈர்க்கிற வகையில், யாதொரு இசை நிகழ்ச்சி அல்லது யாதொரு திரையரங்கச் செயல்பாடு அல்லது எவ்வித ஏதேனும் பிற கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சியை நடத்த அல்லது ஏற்பாடு செய்வதன் மூலம் அங்குள்ள பொதுமக்களிடம் யாதொரு தேர்தல் விவகாரத்தையும் யாதொரு நபரும் பரப்புரை செய்யக் கூடாது. இந்த விதிமுறை மற்றும் மேற்கண்ட இரண்டு விதிமுறைகள் எவ்வித்தத்தில்மீறப்பட்டாலும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126 (2)-ன்படி, 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இவையிரண்டும் சேர்த்து தண்டனையாகவிதிக்கப்படும்.

தொகுதி வெளியேயிருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல்கட்சிநிர்வாகிகள்,கட்சிப் பணியாளர்கள் மற்றும் அத்தொகுதியின் வாக்காளர்கள் அல்லாதோர் ஏப். 21 ஆம் தேதி அன்று மாலை 6.00 மணிக்கு மேல் அத்தொகுதியைவிட்டு வெளியேற வேண்டும்.

கல்யாண மண்டபம், சமுதாயக்கூடம், தங்கும் விடுதிகள்,விருந்தினர் இல்லம் ஆகிய இடங்களில் வெளியாட்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பது கண்டறியப்படும்.

வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் உட்பட வாகன அனுமதிகள், ஏப்.21-ஆம் தேதி மாலை 6.00 மணி முதல் செயல்திறனற்றது ஆகிவிடும்.

சட்டமன்றத் தேர்தலுக்கான ஒவ்வொரு வேட்பாளருக்கும் வாக்குப்பதிவு நாளன்று வாகன அனுமதி பின்வருமாறு:

அவரது சொந்த பயன்பாட்டிற்கான ஒரு வாகனம், தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்கான சட்டப்பேரவைத் தொகுதிக்கு ஒரு வாகனம்மற்றும்தேர்தல் முகவர் அல்லது அவரது பணியாளர்கள் பயன்பாட்டிற்கான ஒரு வாகனம் என மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் அனுமதி தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்படும்.

வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவதற்கும்,வாக்குச்சாவடிகளிலிருந்து அழைத்துச் செல்வதற்கும் வேட்பாளர் அல்லது அவரது முகவர் வாகனத்தை வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது வாங்குவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு எந்தவொரு வேட்பாளரும் அனுமதிக்கக்கூடாது. இது 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 133ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய முறை கேடான செயலாகும். இரண்டு நபர்களை மட்டுமே கொண்ட,வேட்பாளர்கள்/அரசியல் கட்சிகளின் தேர்தல் அலுவலகம் வாக்குச்சாவடியிலிருந்து 100 மீட்டர்கள் தொலைவிற்கு வெளியே அமைக்கப்படலாம். தேவையில்லாத கூட்டத்தை அவர்கள் அனுமதிக்கக் கூடாது.









மதசார்பற்ற முற்போக்குகூட்டணிசார்பில்விருத்தாச்சலம்தொகுதியில்போட்டியிடும் தேமுதிக கட்சியின் பொதுச் செயலாளர் திருமதி விஜயகாந்த் பிரேமலதா அவர்களுக்கு முரசு சின்னத்திற்கு வாக்கு கேட்டு விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அமைச்சர் சி வெ கணேசன் அவர்கள் இன்று விருதாச்சலத்தில் வாக்கு சேகரித்தனர். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகளும் மற்றும் பொதுமக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் பெரியகுளத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சமத்துவ வழக்கறிஞர் சங்கத்தின் சார்பில் பெரியகுளம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் பெ சக்திவேல் அவர்களைஆதரித்துவழக்கறிஞர்களின்மாநிலதுணைச்செயலாளர்கரிகாலன் தலைமையில் 100க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் தேனியில் இருந்து பெரியகுளம் வரை விசிக வேட்பாளர் சக்திவேலுக்கு பிரச்சாரம் மேற்கொண்டனர் இந்நிகழ்வில் மாநிலச் செயலாளர்கள். சரவணன்,விவேகா, மாநில துணைச்செயலாளர் அருள்ஜோசப்.மாதவன், மணிகண்டன், அன்பழகன்,சிவலிங்கம், முருகன், ராம்குமார் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இறுதியாக பெரிய குளத்தில் அமைந்துள்ளபுரட்சியாளர் அம்பேத்கர்சிலைக்குமாலைஅணிவித்துமரியாதைசெய்தனர்

## அழகப்பா அரசு கல்லூரி வேதியியல் துறை பேராசிரியருக்கு இந்தியன் மெம்ப்ரேன் சொசைட்டி (IMSIndian Membrane Society) விருது



அழகப்பா அரசு கலைக் கல்லூரி வேதியியல் துறையில் இணைப்பேராசிரியராக பணிபுரியும் முனைவர் நாகேந்திரன் இந்தியன் மெம்ப்ரேன் சொசைட்டியின் Mid-Career Fellow விருதை இந்திய தொழில்நுட்ப கழகம் (IIT)-பம்பாயில் சமீபத்தில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் பெற்றுள்ளார். IMS துவங்கி நாற்பது ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி விருதுகள் வழங்கப்படுகிறது. இத்துறையில் இவரின் சிறப்பான பங்களிப்பிற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு,எரிபொருள் மின்கலங்கள் (Fuel Cells)மற்றும்ஆக்சிஜனேற்றஒடுக்கப்பாய்வுமின்கலம் (Redox-Flow Battery) ஆகியவற்றிற்கு தேவையான நீடித்து உழைக்கும் மற்றும் குறைந்த செலவிலான மெம்ப்ரேன்களைதயாரித்தல்இவரதுஆய்வுபணியின் முக்கிய நோக்கமாகும். முனைவர் நாகேந்திரன், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இளங்கலை பட்டமும்,சென்னைஅண்ணாபல்கலையில்முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.அழகப்பா அரசு கல்லூரியில் 2009-ம் ஆண்டு வேதியியல் துறையில் பணியில் சேர்ந்தார். இவரின் ஆய்வு வழிகாட்டுதலில் 8 பேர் முனைவர்பட்டம்பெற்றுள்ளனர்,மேலும்தற்பொழுது 4 பேர் முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்களாக உள்ளனர். இவர் சுமார் ரூபாய் 70 லட்சம் நிதியாக UGC, DST-Young Scientist, DST-SERB-EMR மற்றும் CSIR ஆராய்ச்சி திட்டங்களில் பெற்று, அதன் மூலம் பாலிமெரிக் மெட்டீரியல்ஸ் ஆய்வு கூடத்தை அமைத்து ஆய்வு திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். இதுவரை 85 ஆய்வு கட்டுரைகளை peer-reviewed இதழ்களில் வெளியிட்டுள்ளார், அவை 3850 முறை மேற்கோள் (Citations) காட்டப்பட்டுள்ளது. இவரின் ஆராய்ச்சியாளர் தரக்குறியீடுகள் h-index 41 மற்றும் i-10 index 74 ஆக உள்ளது.இவரிடம் முனைவர் பட்டம் பெற்று Post-Doctoral Fellow ஆக பல மாணவர்கள் சீனா, கத்தார் போன்ற நாடுகளில் ஆய்வு பணிகளை மேற்கொண்டும் மற்றும் இந்தியாவின் சிறந்த கல்வி நிறுவனங்களில் பேராசிரியர்களாகவும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், ஒட்டாவா பல்கலைக்கழகம், கனடா உட்பட பல சிறந்த ஆராய்ச்சி நிறுவனங்களின் பேராசிரியர்களுடன் கூட்டு ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டு வருகிறார். இவ்விருதை பெற்றதற்காக, முனைவர் நாகேந்திரனுக்கு, கல்லூரி முதல்வர் முனைவர் வசந்தி, வேதியியல் துறைத் தலைவர் முனைவர்லெட்சுமிமற்றும்பேராசிரியர்கள்வாழ்த்து தெரிவித்தனர்.

## பெரியகுளம் தொகுதி தவெக வேட்பாளரை ஆதரித்து பேசிய கம்பம் தொகுதி தவெக வேட்பாளர்

தேனியில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளையும் வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற பொறுப்பை விஜய் எனக்கு கொடுத்திருக்கி-றார்அந்தகடமைஎனக்கு உள்ளது எனக் கூறி விசில் சின்னத்திற்கு வாக்கு செய்தார்



தமிழக வெற்றி கழகத்-தின் தேனி மாவட்டம் பெரியகுளம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சபரி ஐயங்கரனை ஆத-ரித்து தமிழக வெற்றி கழகத்தின் கம்பம் தொகுதி வேட்பாளர் ஜெகநாத் மிஸ்ரா பிரச்-சாரத்தில் ஈடுபட்டார்

பெரியகுளம் தொகு-திக்குட்பட்ட தேனி அல்-லிநகரம், பொம்மையக-வுண்டன்பட்டி, அன்னஞ்சி, வடபுதுபட்டி உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம்மேற்கொள்ள வருகை தந்த தவெக வேட்பாளர்களுக்கு கட்-சியினர் பட்டாசுகளை வெடித்து உற்சாக வர-வேற்பு அளித்தனர்

தொடர்ந்து பிரச்சாரத்தில் பேசிய ஜெகநாத் மிஸ்ரா வருகிற ஆண்டு தமிழகத்தில் நல்லாட்சியை தருகிற ஆட்சியாக அமையும், ஒட்டுமொத்த மக்க-ளுக்கு ஒரு மாற்றத்தை-யும் நல்ல எதிர்காலத்தை கொடுப்பதற்காக கோடிக்கணக்கான வரு-மானத்தை விட்டு மக்க-ளுக்காக வந்து இருக்கி-றார் விஜய்

தேனி மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற பொறுப்பை விஜய் எனக்கு கொடுத்திருக்கி-றார்அந்தகடமைஎனக்கு உள்ளது

பெரியகுளம் தொகுதி-யில்போட்டியிடும்வேட்-பாளர் சபரி ஐயங்கரன் அதிகம் படித்தவர் அவ-ருக்கு விசில் சின்னத்தில் வாக்களியுங்கள் என வாக்கு சேகரித்தார்

தொடர்ந்து பேசிய அவர் பெரியகுளம் தொகுதியில் எதிர்த்து நிற்கும் வேட்பாளர்க-ளில் ஒருவர் வெளியூரை சேர்ந்தவர் (விசிக வேட்-பாளர் சக்திவேல்) மற்-றொருவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் (அமமுக வேட்பாளர் கதிர்காமு) அவர் இந்த தொகுதியில் தேவையே இல்லாதவர் என்று விமர்சனம்செய்துவிசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்

### கோவை ஏ.ஜே.கே. கல்வி குழுமங்களின் தலைவரும், செயலாளருமான அஜித்குமார் லால் மோகன், தன்னுடைய தந்தையும்,

## விஞ்ஞானி ஆர்.எஸ். லால்மோகனின், சாதனைகள் மற்றும் வாழ்க்கை வரலாறு தொடர்பான அறிவுப்பெருங்கடல் என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார்



கோவை ஏ.ஜே.கே. கல்வி குழுமங்களின் தலைவரும், செயலாள-ருமான அஜித்குமார் லால் மோகன், தன்னு-டைய தந்தையும், விஞ்-ஞானியுமான ஆர்.எஸ். லால்மோகனின், சாத-னைகள் மற்றும் வாழ்க்கை வரலாறு தொடர்பான அறிவுப்பெ-ருங்கடல் என்ற புத்தகத்தை எழுதி உள்-ளார். இந்த புத்தகத்தின் வெளியீட்டு விழா கோவை அவினாசி சாலையில் உள்ள தனி-யார்ஹோட்டலில்நடை-பெற்றது.

விழாவுக்கு வந்து இருந்தவர்களை வர-வேற்று அஜித்குமார் லால்மோகன் கூறியதாவது..

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்த என்னுடைய தந்தை லால்மோகன் இயற்-கையை பாதுகாக்க பல்-வேறு சேவைகளை செய்தவர்.இதனால் ஏற்-பட்ட வழக்குகளை நீதிக்-காக போராடி வென்றவர். அவரது வாழ்க்கை சாதாரணமானது அல்ல. விஞ்ஞானியாகவும், மனிதநேயமிக்க-வராகவும் சேவையாற்-றியவர்.இந்த புத்தகத்தை எழுதி வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி-னார். புத்தகத்தை நாகர்கோவில் சாமி-தோப்பு அய்யாவழி ஆன்மிக குரு பாலபிர-ஜாபதிஅடிகளார்வெளி-யிட, ஜி.ஆர்.ஜி. கல்வி குழும நிர்வாகி நந்தினி ரங்கசாமி பெற்றுக்-கொண்டார். கோவை சி.எஸ்.ஐ. டயோசிஸ் துணைத்தலைவர் எல். டேவிட் பர்னபாஸ், ஆர்த்தோ ஒன் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் டேவிட் ராஜன், மூத்த வக்கீல் என். சுந்தரவடிவேலு, சுஜாதா ரஞ்சித் ஆகி-யோர் கலந்து கொண்டு புத்தகம் குறித்தும், லால்மோகனின் பெரு-மைகள் குறித்தும் பேசி-னார்கள். விழால் ஏ.ஜே. கே. கலை அறிவியல் கல்லூரி இயக்குனர் பிந்து அஜித் உள்பட திர-ளானவர்கள் கலந்து-கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### எலப்பாக்கத்தில்

## சின்மய விநாயகர் பாலமுருகன் திருக்கோவிலில் 66வது ஆண்டு சித்திரை கிருத்திகை பால் காவடி பெருவிழா



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள எலப்பாக்கம் சின்மய விநாயகர் பாலமுருகன் திருக்கோவிலில் பரணி விழாவும் கிருத்திகை பால் காவடி பெருவிழா அதிகாலை சுவாமிக்கு சிறப்பு அபிஷேக அலங்காரம் ஆராதனைகள் நடைபெற்றது.அதனைத்தொடர்ந்துஉள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து வந்த பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்த வேண்டி பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்ப காவடி, எடுத்து ஊர்வலமாக சென்றடைந்து மூலவரான பாலமுருகனுக்கு அபிஷேகம் செய்தனர்.பின்புசிறப்புமலர்அலங்காரத்தில் எழுந்தருளிய முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதில் ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர். மேலும் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

## கோவை வடக்கு சட்ட மன்ற தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக, ஸ்டூல் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் சத்ரபதி சிவாஜி

### அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு அனைத்து வகை அமைப்பு சாரா தொழிலாளர் நல நற்பணி நல சங்க நிறுவனருமான சரவணன் தனது தேர்தல் பரப்புரையை துவங்கினார்



கோவை சத்ரபதி சிவாஜி அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு அனைத்து வகை அமைப்பு சாரா தொழி-லாளர் நல நற்பணி சங்க நிறுவனருமான சரவ-ணன், மக்கள் ஆசியுடன், கோவை வடக்கு சட்ட மன்ற தொகுதியில் சுயேச்சையாக போட்டி-யிடுகின்றார். இவருக்கு தேர்தல் ஆணையம் ஸ்டூல் சின்னத்தை ஒதுக்கியுள்ளது. அவ்-வாறு ஒதுக்க பட்டுள்ள சின்னத்திற்கு வாக்க சேகரிக்கும் பணிகளை இன்று துவங்கினார். இவர் கோவை பாப்பநா-யக்கன் புதூர் பகுதியில், தனது தேர்தல் பரப்பு-ரையை மேற்கொண்டார். மேலும் இது குறித்து சர-வணன் செய்தியாளர்க-ளிடம் கூறியதாவது. இன்று முதல் வாகனத்-தில்,தனது பிரச்சாரத்தை மக்கள் மத்தியில் துவங்-கியுள்ளதாகவும், நேரடி-யாக மக்களை சந்தித்து வாக்குகளை கேட்டு வருவதாகவும் கூறினார். வடக்கு சட்ட மன்ற தொகுதியில் உள்ள பொதுமக்களின் குறை-கள் என்னென்ன என்-பதை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்து தருவதாகவும் கூறினார்,மேலும் மாதம் இருமுறைதனதுதொகுதி மக்களை நேரில் சந்-தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து அவற்றையும் உடனடி-யாக தீர்க்க உரிய நடவ-டிக்கை எடுப்பேன். மக்-கள் எந்த தேவைகளுக்காகவும் என்னை எப்பொழுதும் சந்திக்கலாம் என கூறி-னார். இந்த நிகழ்ச்சியில்,

ஜெய்ஹனுமன்வெற்றி சேனா அமைப்பின் நிறு-வனர் கே.எஸ்.கனகராஜ், தீரன் சின்னமலை கவுண்டர் இளைஞரணி நிறுவனர் தீரன் கவி, சத்-ரபதி சிவாஜி அறக்கட்ட-ளையின் பசியில்லாதமி-ழக அங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்த க்-கது.

## மதுராந்தகம் தொகுதி திமுக வேட்பாளர் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் அமுலு பொன்மலர் வீதி வீதியாக சென்று பிரச்சாரம்



செங்கல்பட்டு மாவட்-டம் மதுராந்தகம் தனி சட்டமன்றத் தொகுதி

மதுராந்தகம் நகராட்-சிக்கு உட்பட்ட 24 வார்டு-களில் மக்கள் வெள்-ளத்தில் மதுராந்தகம் நகர மன்ற தலைவர் மலர்விழி குமார் தலை-மையில் 24 வார்டுகளி-லும் திமுக முகப்பு பேனர்கள் வைக்கப்பட்டு தமிழ்நாடு முதல-மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கழகபாடல்-களை பொதுமக்களுக்கு ஒளி வடிவில் வழங்கி மதுராந்தகம்தனிதொகு-தியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியி-டும் அமுலு பொன்மலர் மதுராந்தகம் பஜார் வீதி-யில் தீவிர வாக்கு சேக-ரிப்பில் ஈடுபட்டார்.இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் விசிக நகர செயலாளர் கிட்டு பிரபா-கரன், மாவட்ட செயலா-ளர் அன்பு செல்-வன், பொருளாளர் பேரறிவாளன், ஊடக செயலாளர் கலை கதிர-வன், உள்ளிட்ட நிர்வா-கிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பாவூர்சத்திரம் பகுதியை சேர்ந்த அதிமுக, பாஜக, தவெக கட்சிகளை சேர்ந்த 100 இளைஞர்கள் திமுகவில் இணைந்தனர்

தென்காசி தெற்கு மாவட்ட திமுக அலுவல-கம் மற்றும் கலைஞர் அறிவாலயத்தில் நடை-பெற்ற நிகழ்ச்சிக்கு தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்-பாளர் சுரண்டை வே. ஜெயபாலன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சிக்கு முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலா-ளர் வழக்கறிஞர் பொ.சிவபத்மநாதன் முன்னிலை வகித்தார். இந்தநிகழ்ச்சியில்தென்-காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் டாக்-டர் கலை கதிரவன் முன்-னிலையில் பாவூர்சத்தி-ரம் பகுதியைச் சேர்ந்த பாவூர்சத்திரம் பகுதி-யைச் சேர்ந்த அதிமுக பாஜக கவெக கட்சிக-ளைச் சார்ந்த 100 இளை-ஞர்கள் திமுகவில் இணைந்தனர்.திமுகவில் இணைந்த 100 இளை-ஞர்களுக்கும் திமுக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன், தென்காசி



தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் சுரண்டை வே.ஜெயபாலன், முன்-னாள் மாவட்ட செயலா-ளர் வழக்கறிஞர் பொ.சிவபத்மநாதன், தென்காசி தொகுதி திமுக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன், ஆகியோர் கைத்தறி ஆடை அணி-வித்து வரவேற்றனர். இந்த நிகழ்ச்சியில் திமுக தலைமை ஏ.பி.அருள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



## கோடை விடுமுறையை பயனுள்ளதாக மாற்றும் முயற்சி: மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கி பரிசு அறிவித்த தேவகோட்டை பள்ளி

தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை பகுதியில் உள்ளசேர்மன்மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி, மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் நோக்கில் புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது.கோடை விடுமுறையை பயனுள்ளதாக பயன்படுத்த மாணவர்களுக்கு பள்ளியின் சார்பில் புத்தகங்கள் வழங்கப்பட்டன. பள்ளியின் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம், ஒவ்வொரு மாணவரும் விடுமுறையில் குறைந்தது நான்கு புத்தகங்கள் படிக்க வேண்டும் என அறிவுறுத்தி, அந்த புத்தகங்களை மாணவர்களின் வீடுகளுக்கு நேரடியாக வழங்க ஏற்பாடு செய்தார். மேலும், தமிழக அரசு ஊரகப் பகுதிகளில் பல நூலகங்களைத் திறந்து, அரியவகை புத்தகங்களையும் வழங்கி வருவதை குறிப்பிட்டு, மாணவர்கள் நூலகங்களைப் பயன்படுத்தி தங்கள் அறிவை விரிவுபடுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.இந்தமுயற்சிக்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஸ்ரீதர்,முத்துமீனாள் மற்றும் முத்துலெட்சுமி மேற்கொண்டனர். விடுமுறை முடிந்து பள்ளி திறக்கும் போது, மாணவர்கள் படித்த புத்தகங்களைப் பற்றி கேள்விகள் கேட்டு, சிறப்பாக பதிலளிக்கும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என பள்ளி நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்த புதிய முயற்சி, மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பெரிதும் பாராட்டப்படுகிறது.

## விருத்தாசலம் தொகுதி வேட்பாளர் பிரேமலதா விஜயகாந்தை ஆதரித்து சேப்பாக்கம் ஊராட்சியில் கூட்டணிக்கட்சியினர் தீவிர வாக்குச்சேகரிப்பு



கடலூர் மாவட்டம், வேப்பூர் அடுத்துள்ள சேப்பாக்கம் ஊராட்சியில், விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் முரசுசின்னத்தில்போட்டியிடும் வேட்பாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் அவர்களை ஆதரித்து கூட்டணிக் கட்சியினர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், நல்லூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளருமான பாவாடை கோவிந்தசாமி அவர்களின் ஆலோசனையின்படி நடைபெற்ற இந்த வாக்குச்சேகரிப்பு நிகழ்விற்கு, திமுக நல்லூர் வடக்கு ஒன்றிய விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பொறியாளர் மணிகண்டன் தலைமை தாங்கினார். விசிக நல்லூர் ஒன்றியப் பொருளாளர் சாண்டிலியன் முன்னிலை வகித்தார். இதில் 100-க்கும் மேற்பட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்துகொண்டு, கிராமத்தின் அனைத்துத் தெருக்களுக்கும் நேரடியாகச் சென்று பொதுமக்களிடம் துண்டுப் பிரசுரங்களை வழங்கி முரசு சின்னத்திற்கு தீவிரமாக வாக்குக் கேட்டனர்.

இப்பிரச்சாரத்தில், விசிக மாவட்ட நிர்வாகி கருப்புசாமி, கிளைச் செயலாளர் ஆனந்தபாபு, நிர்வாகிகள் அசோக், அண்ணாமலை, அஜித்குமார், எஸ்.பி. மணிகண்டன், கணபதி ஆகியோரும், திமுக தரப்பில் நிர்வாகிகள் ரஞ்சித்குமார்,சௌத்ரி,அலெக்ஸ், ஒன்றிய இளைஞரணி சாக்ரடீஸ், ஒன்றிய அயலக அணி ஞானசேகர், தகவல் தொழில்நுட்ப அணி ஆகாஷ், கவிமணி, ஸ்டாலின், தமிழரசன் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக்கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலரும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

## பெண்ணாடம் அரிமா சங்கத்தின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வார விழா: சமூக சேவகருக்கு நினைவுப்பரிசு

பன்னாட்டு அரிமா சங்கத்தின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு, பெண்ணாடம் அரிமா சங்கம் சார்பில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பாராட்டு விழா பெண்ணாடம் பகுதியில் நடைபெற்றது.



விவசாய தொழில் சார்ந்த இயந்திரவியல் பணிகள் நிறுவனத்தின் பங்களிப்புடன், கடந்த இரண்டு ஆண்டுகளாக சக்திவேல் என்பவரின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளை நட்டு பராமரித்து வரும் இயற்கை ஆர்வலரின் சமூக சேவையை பாராட்டி ஊக்குவிக்கும் வகையிலும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் அவருக்கு பெண்ணாடம் அரிமா சங்கம் சார்பாக நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும், இந்நிகழ்வில் விவசாயத் தொழிலாளர்களுக்கும் சிறப்பு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை பெண்ணாடம் அரிமா சங்கத் தலைவர் (தேர்வு) லயன் பாண்டியன், பொருளாளர் (தேர்வு) லயன் கணேஷ் மற்றும் சாமிநாதன் ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்து நடத்தினர்.

### தமிழகத்தில் எல்லாத்துறைகளிலும் பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர்

# திமுக ஆட்சி தொடர உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் அமைச்சர் கீதாஜீவன் பிரச்சாரம்



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளரும் அமைச்சருமான கீதாஜீவன் போட்டியிடுகிறார்.

43, 46, 47வது ஆகிய வார்டுகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.மாநகர செயலாளர் ஆனந்தசேகரன் தலைமை வகித்தார். மேயர் ஜெகன் பெரியசாமி, வட்டச்செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், லியோஜான்சன், கவுன்சிலர் முத்துமாரி, ஆகியோர் முன்னிலைவகித்தனர்.

தூத்துக்குடி மாநகர பகுதியான பக்கிள்புரத்தில் இருந்து பிரச்சாரத்தை துவக்கி முனியசாமிபுரம், பாத்திமாநகர், உள்ளிட்ட பல்வேறு பகுதியில் மேற்கொண்ட அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்: கடந்த 5ஆண்டுகளில் இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலமாக தமிழகம் பல்வேறு வகையில் வளர்ச்சியடைந்துள்ளது. எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியில் அனைத்து தரப்பினரும் நன்மைகள் அடைந்துள்ளன. குறிப்பாக பெண்களுக்கு விடியல் மகளிர் பயணம் மகளிர் உரிமைத்தொகைபெண்கள் தொழில்முனைவோராக உயர்வு மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஊக்குவித்தல் மகளிர் உயர்வு மாநிலத்தின் உயர்வு என்ற அடிப்படையில் தமிழக முதலமைச்சர் முக.ஸ்டாலின் எல்லாத்துறைகளிலும் எல்லா வகையிலும் மகளிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பணியாற்றி வருகிறார். குறிப்பாக தூத்துக்குடியில் 60 உறுப்பினர்கள் மாநகராட்சியில் இருக்கும் இடத்தில் 50 சதவீதத்தை கடந்து 32 பேர் பெண்கள் தான் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றுகின்றனர். இது போன்ற பல்வேறு சாதனைகள் இருக்கிறது.இந்ததொகுதியில் நான் 5 ஆண்டுகாலம் எம்எல்ஏவாகவும் அதற்குபின் 5 ஆண்டுகாலம் அமைச்சராகவும் தொடர்ந்து தொகுதியின் வளர்ச்சிக்கு உங்களோடு இணைந்து பணியாற்றியுள்ளேன். தொடர்ந்த பணிகளையும் விட்ட பணிகளையும் தொடர்ந்து செய்திட நீங்கள் மீண்டும் எனக்கு ஒரு வாய்ப்பை உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் நல்லாட்சி நடத்தி வரும் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு அனைத்து தரப்பினரும் முழுமையான ஆதரவை தரவேண்டும் என்று பேசினார்.

பிரச்சாரத்தில் திமுக மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ்,மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன்செல்வின் துணை மேயர் ஜெனிட்டா, மாநில மீனவரணி துணைச்செயலாளர் புளோரன்ஸ், மாவட்ட மீனவரணி அமைப்பாளர் அந்தோணிஸ்டாலின், பகுதி செயலாளர் ராமகிருஷ்ணன், மாநகர இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன் ஜேக்கப், துணை அமைப்பாளர் பால்ராஜ், சுற்றுச்சூழல் அணி தலைவர் வினோத், முன்னாள் கவுன்சிலர் வெங்கடசுப்பிரமணியன், மாநில காங்கிரஸ் துணைத்தலைவர் சண்முகம், மாவட்ட காங்கிரஸ் தலைவர் சகாயராஜ், காங்கிரஸ் நிர்வாகிகள் ஐசன்சில்வா, நிர்மல்கிறிஸ்டோபர், நாராயணன், இக்னேஷியஸ், ப்ரத்தி, சிமியோன், மைதீன் விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் விமல்வங்காளியார், தேமுதிக மாவட்ட செயலாளர் தயாளலிங்கம், பொறுப்பாளர் வல்லரசு துரை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் தனலட்சுமி, மதிமுக மாநகர செயலாளர் முருகபூபதி, மார்க்கிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் முத்து, எஸ்டிபிஐ கட்சி தொகுதி பொறுப்பாளர் காதர்உசேன்,மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் முகமது அசன், துணைச்செயலாளர் ஜாகிர்உசேன், மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் ஜவஹர், துணைசெயலாளர் அக்பர், அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், பிரதிநிதிகள் பாஸ்கர், ரஜினிமுருகன், கம்யூனிஸ்ட் செயற்குழு உறுப்பினர்கள் அர்ஜுனன் ராஜா கூட்டணி கட்சியை சேர்ந்த வில்சன், மகாராஜன், பொன்ராஜ், சித்திரைவிஜயன் மணிமாறன் ஜீவாபாண்டியன் மற்றும், மணி ஜாக்சன், அல்பட் உள்பட கூட்டணி கட்சியை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.



23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026யொட்டி (20.04.2026) நேற்று ஈரோடு மாவட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்படவுள்ள தளவாடப்பொருட்களை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



ஆலங்குளம் தொகுதியில் பாப்பாக்குடி வட்டாரத்தில் உட்பட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் வேட்பாளர் அன்பிற்குரிய அண்ணாச்சி பி ஹெச் மனோஜ் பாண்டியன் அவர்களோடு முன்னாள் அமைச்சர் பூங்கோதை அம்மா அவர்களும் திமுக ஒன்றிய செயலாளர் சிவகுமார் அவர்கள் வாக்கு சேகரித்த போது பாப்பாக்குடி வட்டாரம் காங்கிரஸ் தலைவர் தினகரன்

## அண்ணா அறிவாலயத்திலிருந்து வருபவர்கள் யாரையும் தரக்குறைவாக பேச மாட்டார்கள் கண்ணியத்துடனும் பண்புடனும் இருப்பவர்கள் திமுகவினரே

### மதுரையில் திருச்சி சிவா MP பிரச்சாரம்



உங்களிடம் காசு பணம் கேட்டு வரவில்லை ஒரே ஒரு ஓட்டு உதயசூரியனுக்குவாக்களித்துநாடும் மக்கள் நலமுடன் இருக்க வாக்களிப்பீர் உதயசூரியனுக்கு மோடியும் அமித்ஷாவையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் - திருச்சி சிவா MP*

மதுரை சிந்தாமணியில் திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டியனுக்கு ஆதரவாக மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி என் சிவா தேர்தல் பரப்புரை திருப்பரங்குன்றம் தொகுதி வாக்காளர்களை பெருமக்களே 23ஆம் தேதி தமிழ்நாட்டில் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற உங்களிடம் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராக போட்டியிடும் கிருத்திகை தங்க பாண்டியன் அவர்களுக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்களிக்க ஆதரவு கேட்டு வந்துள்ளேன் .

மற்ற இடங்களிலும் பேசுவதைக் காட்டிலும் இது பேசுவது சிறு அச்சம் ஏற்படுகிறது பக்கத்திலே கலைஞர் என்னை பார்த்துக் கொண்டிருக்கிறார்

நேற்றைக்கு முன்தினம் டெல்லியிலே எதிர்க்கட்சிகள் எதிர்த்து வெற்றி பெற்றதை பின் உங்களை சந்திக்க வந்துள்ளேன்

திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் தளபதி அண்ணன் ஸ்டாலினை போற்றி நாடாளுமன்றத்தில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் மோடியும் அமித்ஷாவும் சேர்ந்து இந்தியாவில் உள்ள நாடாளுமன்ற தொகுதிகளை சட்டமன்ற தொகுதிகளை மறு வரையறை செய்ய மசோதாவை கொண்டு வந்தனர் அத்தோடு மகளிர்க்கு சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் 33 சதவீதம் இட ஒதுக்கீடு தர வேண்டும் என்ற மசோதா ஏற்கனவே உள்ளது .

5 ஆண்டுகள் ஆட்சிக்குப் பின் மீண்டும் உங்களை தேடி வந்துள்ளார்

பாராளுமன்றத்திற்கு ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் எப்படிப்பட்டவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பேருந்தை நிறுத்தி அதன் ஓட்டுனரை இறக்கிவிட்டு என்னை ஓட்டுவதாக வைத்து ஓட்டு கேட்டால் நியாயமா பேருந்தில் பயணம் செய்கிறவர்களுக்கு நல்ல ஓட்டுநர் தான் தேவை நான் அந்த வேலை செய்கிறேன் இந்த வேலை செய்கிறேன் என்று கூறுவது தவறு நாடாளுவோருக்கு நல்ல தலைவன் மக்களை நடத்துவதற்கு தலைவன் தான் தேவை அவர்தான் முதல்வர் ஸ்டாலின்

அண்ணா சொன்னதைப் போல பொது வாழ்விற்கு வந்தவர்கள் மக்களோடு வாழ வேண்டும் நட வேண்டும் கிருத்திகா உங்களோடு சேர்ந்து ஒருவராகஉழைத்துக்கொண்டிருக்கிறார்

பெண்கள் வீட்டில் தங்களின் சின்ன சின்ன தேவைகள் நிறைவு செய்ய உரிமை தொகை உங்களுக்கு உதவுகிறது

இந்தியாவிலேயே உள்ளாட்சியில் 50%விழுக்காடு பெண்களை தேர்வு செய்ததுதமிழகமட்டுமேஅதுவும் முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில் மட்டுமே

அண்ணா அறிவாலயத்தில் இருந்து வருபவர்கள் யாரையும் தரக்குறைவாக பேச மாட்டார்கள்

23ஆம் தேதி நடித்த நாடு உள்ளது தமிழ்நாட்டில் முடிவு பார்த்துதான் இந்தியாவே காத்துகொண்டிருக்கிறது. வெற்றி விழாவிற்கு வருகின்றேன் இன்னும் விரிவாக பேசுவோம் என மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி N.சிவா பேசினார் அவனியாபுரம் மேற்கு ஒன்றியசெயலாளர்செந்தாமரைக்கண்ணன் பகுதி செயலாளர் கணேசன் வட்ட செயலாளர் வழக்கறிஞர் சரத்குமார் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட ஆயிரம் பேர் கலந்துகொண்டனர்.

## போதையில்லா சமூகத்தை உருவாக்குவதே இலக்கு

### வாசுதேவநல்லூர் பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி உறுதி



வாசுதேவநல்லூர் தொகுதி பாஜக வேட்பாளர் ஆனந்தன்அய்யாசாமிதீவிரபிரச்சாரம்மேற்கொண்டு வருகிறார். நேற்று சுப்பிரமணியபுரம், மருதநாச்சியார்புரம், நவாச்சோலை, வெள்ளானைக்கோட்டை, தாருகாபுரம்,மலையடிக்குறிச்சி,தலைவன்கோட்டை, முள்ளிக்குளம், ஈச்சம்பொட்டல்புதூர், துரைச்சாமிபுரம், நகரம், வடமலாபுரம், ஆண்டார்குளம், ராமசாமிபுரம், முத்துச்சாமிபுரம், புன்னைவனம், வெள்ளக்கவுண்டன்பட்டி மற்றும் சிவகிரி பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது கிரம்ப்புற பெண்கள், விவசாய கூலித் தொழிலாளிகளிடம் வாக்குசேகரித்தார். ஆனந்தன் அய்யாசாமியிடம் விவசாய தொழிலாளிகள் டாஸ்மாக் மதுக்கடைகளால் பாதிப்புக்கு உள்ளாவதாக முறையிட்டனர். இதையடுத்து அவர் பேசுகையில்,மதுக்கடைகள் சமூகத்தில் ஏற்படுத்தும் தீமைகள் குறித்து அவர் தீவிரமாக பேசினார். குறிப்பாக, "மதுக்கடைகள் காரணமாக குடும்பங்கள் சீரழிகின்றன;பெண்கள் மற்றும்குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்" எனக் குறிப்பிட்டார்.

மேலும், மதுக்கடைக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் தனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்யும்படி பெண்களிடம் கேட்டுக் கொண்டார். டாஸ்மாக் மதுக்கடைகள் மற்றும் பார்களால் சுற்றுவட்டாரத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பு சிக்கல்கள், சமூக இன்னல்கள் குறித்து எடுத்துரைத்த அவர்,தனது வெற்றிக்கு பின்னர் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண உறுதி அளித்துடன், போதையில்லா சமூகத்தை உருவாக்குவதே எனது இலக்கு என்றும் குறிப்பிட்டார். இந்த பிரச்சாரத்தில் உள்ளூர் நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு உற்சாகம் அளித்தனர்.

# திமுக ஆட்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்த சாதனைகள் ஏராளம் இன்னும் தொடர்ந்து செய்திட உதயசூரியன் சின்னத்தில் எனக்கு வாக்கு அளிக்க வேண்டும் என்று கீதாஜீவன் பேச்சு



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளரும் அமைச்சருமான கீதாஜீவன் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுகிறார்.தூத்துக்குடி மாநகராட்சிக்குட்டபட்ட 52,59,60, ஆகிய வார்டுகளில் பிரச்சாரம் மேற்கொண்டார். மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மேயர் ஜெகன்பெரியசாமி,மண்டலத்தலைவர் வக்கீல் பாலகுருசுவாமி, பகுதி செயலாளர் மேகநாதன், வட்டச்செயலாளர்கள் நடசேன் டேனியல் அனல் சக்திவேல், மனோகர், ஆகியோர் முன்னிலை வகித்தனர். தூத்துக்குடி முள்ளக்காடு கிராமத்தில் பிரச்சாரத்தை தொடங்கி அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்:தமிழகத்தில் 5 ஆண்டுகாலம் நடைபெற்ற திமுக ஆட்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்த சாதனைகள் ஏராளம் குறிப்பாகஎல்லாத்துறைகளும் வளர்ச்சியடைந்து தமிழகம் திகழ்கிறது.முதலமைச்சர் ஸ்டாலினுக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும் என்று பேசினார். தொடர்ந்து பொட்டல்காடு, ஸ்பிக்நிறுவன குடியிருப்பு பகுதி,சுந்தர்நகர்,ஜேஎஸ்நகர், சுனாமி காலனி, கேம்ப் 2,துறைமுக குடியிருப்பு பகுதி, லேபர் காலனி ஆகிய பகுதிகளில் வாக்குகள் கேட்டு பிரச்சாரத்தை மேற்கொண்டார். அப்போது, அமைச்சர் கீதாஜீவனுக்கு பொதுமக்கள் மலர்கள் தூவியும், மலர்கீரிடம் மாலை அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் வீரவாள் வழங்கியும், வரவேற்பு அளித்தனர்.

பிரச்சாரத்தில் மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன்செல்வின் மாநிலபொறியாளர்அணி துணைச்செயலாளர் அன்பழகன், மாவட்ட பொறியாளர்அணிதுணை அமைப்பாளர் சின்னத்துரை, மாநில பேச்சாளர் இருதயராஜ், மாநகர இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன்ஜேக்கப், துணை அமைப்பாளர் பால்ராஜ், மகளிர் அணி அமைப்பாளர் ஜெயக்கனி, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ராபின்சன், மாவட்ட மருத்துவ அணி தலைவர் அருண்குமார், நெசவாளர் அணி துணை அமைப்பாளர் குமரன், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், மாநில காங்கிரஸ் துணைத்தலைவர் சண்முகம்,முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர் முரளிதரன், காங்கிரஸ் நிர்வாகிகள் நிர்மல்கிறிஸ்டோபர், நாராயணன், ப்ரீத்தி, சிமியோன், மைதீன், குமாரமுருகேசன், விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் விமல்வங்காளியார், தேமுதிக பொறுப்பாளர் வல்லரசு துரை, மாவட்ட சமத்துவ மக்கள் கழக மாவட்ட செயலாளர் அற்புதராஜ், கவுன்சிலர்கள் விஜயகுமார், ராஜதுரை, பட்சிராஜ், சுயம்பு வட்டார ஜனதாதள தலைவர் அருணாசல பாண்டியன், மதிமுக மாநகர செயலாளர் முருகபூபதி, எஸ்டிபிஐ கட்சி மாவட்ட செயலாளர் மைதீன்கனி, தொகுதி பொறுப்பாளர் காதர்உசேன், மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட துணை செயலாளர் ஜாகிர்உசேன், திமுக பகுதி துணைச்செயலாளர் தீபக் ராஜேஷ், பொருளாளர் முத்துராஜா, அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், பகுதி அணி அமைப்பாளர் சிராஜிதீன், திமுக நிர்வாகிகள் முருகன், தங்கசேகர், கூட்டணி கட்சியை சேர்ந்த வில்சன், மகாராஜன், மற்றும், மணி அல்பட் உள்பட கூட்டணி கட்சியை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, வாக்குப்பதிவு நாளான 23.04.2026யை யொட்டி ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (18.04.2026) அன்று வாக்கு எண்ணும் மையமான சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு டெக்ஸ்வேலியில் (19.04.2026) அன்று 100 சதவீதம் வாக்குப்பதிவை வழியுறுத்தி பொதுமக்களிடம் துண்டுபிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் சென்னிமலை ஒன்றியத்திற்க்கு உட்பட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக கழக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் இந்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ் நாத்சிங் பாஜக வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி மற்றும் அதிமுக வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.உடன் வேட்பாளர்கள் ஆனந்தன் அய்யாசாமி கடையநல்லூர் கிருஷ்ணமுரளி..



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் கொல்லம்பாளையம்பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.




23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யொட்டி (20.04.2026) அன்று ஈரோடு மாவட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 100 சதவீதம் வாக்குப்பதிவை வழியுறுத்தி நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

# 'Trump screamed at aides for hours, was kept out of room': Report narrates what unfolded after Iran shot US jet



*Donald Trump projected himself as a peace President when he ran for a second term in the White House in 2024. The data backed him; he was the only President to not declare a new war during his first term after Jimmy Carter, though it's a name he doesn't want to be associated with.*

*But soon, Trump found himself in the middle of a war twice in a span of nine months, and against the same opponent as well, the one that is blamed for ending Carter's presidency. Iran.*

*And while the Republican has put on a sort of bravado in public about the current US-Iran war that began on February 28, a report suggests that his appetite for risk had run out, and his fears were ramping up.*

*According to a Wall Street Journal report, Trump is dealing with his own fear about ordering troops into harm's way. His fear is that some US troops will be injured and some will not return home, similar to other presidents who have been at war, the report quoted people familiar with the matter as saying.*

*Donald Trump's biggest fears almost came true on a Good Friday afternoon when he learned that an American jet had been shot down in Iran, with two airmen missing. According to the Wall Street Journal, he screamed at his aides for the house, cursed the European allies for not helping and demanded the military rescue the two Airmen right away.*

*Gas prices averaged $4.09. Images of the 1979 Iranian hostage crisis-one of the biggest international policy failures of a presidency in recent times-had been looming large in his mind, according to the sources quoted by the Wall Street Journal. "If you look at what happened with Jimmy Carter... with the helicopters and the hostages, it cost them the election. What a mess," Trump had said in March. Trump demanded that the military rescue the airmen immediately. But there was just one problem. The US hadn't been on the ground in Iran since the Islamic Revolution of 1979, which led to the hostage crisis that the Republicans attributed to Jimmy Carter. And the US military apparatus needed to figure out how to get into treacherous Iranian terrain and avoid Tehran's own military. The report suggests that Trump was kept out of the room as they got minute-by-minute updates. According to a senior administration official, they believed his impatience wouldn't be helpful and instead updated him at meaningful moments.*



தாம்பரம் தொகுதியின் தவெக வேட்பாளர் சரத் குமாருடன் திறந்தவெளி வாகனத்தில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் ரோடு ஷோ சென்றார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.